**மேலதிக விபரங்களுக்கு**.- 2003.05.09 ஆந் திகதிய அரச வர்த்தமானிப் பத்திரிகையிலும் 2003.06.30 ஆந் திகதியின் “தினமின”, “தினகரன்”, “த ஐலண்ட்” எனும் சஞ்சிகைகளிலும் வெளியிடப்பட்ட ஏலவிற்பனை பகுதியை கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்**.- பத்தேகம-ஹிக்கடுவ வீதியில் வவுலாகல சந்தியிலிருந்து அண்மித்ததாக இடப்பக்கமாக இச் சொத்துக்கள் அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை**.- ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும், கீழ்க்கண்டபடி பணமாக கொள்வனவாளரினால் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 25% ;
(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக விற்பனை விலையின் 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2% ;
(4) இலிகிதர் அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனை செலவும், இதர செலவுகள் இருப்பின் அவற்றுக்கான பணம் ;
(6) விற்பனை உறுதிப் பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 75% க்கான பணத்தை ஏலவிற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை, பம்புரன, அனகாரிக

தர்மபால மாவத்தையிலுள்ள இல. 382ஏ எனும் நிலையத்திலுள்ள றுஹுன அபிவிருத்தி வங்கியின் பிரதான அலுவலகத்தின் சாதாரண அதிகாரிக்கு செலுத்துக.

மேற்படி 30 நாட்களுக்குள் குறிப்பிட்ட பணத்தை செலுத்தத் தவறின் தற்போதைக்கும் செலுத்திய 25% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது விடவும் மீண்டும் அச் சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமையுண்டு. உரிமை கோரும் ஒப்பினையையும் குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக்கொள்க.

தொலைபேசி இல.: 041 - 2231532, 2226208, 2226209.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்)
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி : 041 - 2228731

8-824

---

**கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சி – நகரக் கிளை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், மெதபத்து சியன கோரலயில் கம்பஹா பிரதேச சபை எல்லையில் கொஸ்சின்ன கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் கே. ஏ. ரூபசிங்கவின் 04.12.2004 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1326/2004 இல் காண்பிக்கப்பட்ட லொட் 3A/1 என்ற காணி அதிலமைந்துள்ள கட்டிடங்கள் எல்லாவற்றுடன் சேர்த்து ஏலவிற்பனை

காணியின் விஸ்தீரணம் : (0ஏ. 0றூ. 18.40பே.)

*(கடன் எடுத்த சாலுவதன ஆராச்சிகே வீரரத்ன என்பவர் மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ க்கு ஈடுவைத்துள்ளார்.)*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின்கீழ் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டிடங்களையும், காணிகளையும் ஆதனங்களையும் 2008, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி பிற்பகல் 12.30 க்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- தயவுசெய்து 2008.05.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் ''த ஐலண்ட்'', ''லக்பிம'', ''தினகரன்'' பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத்துக்காக 29.08.2008 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 29.08.2008 ஆந் திகதிய ''த ஐலண்ட்'', ''லக்பிம'', ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் விதம்.**- கண்டி வீதியூடாக கொழும்பில் இருந்து கடவத்தை சென்று இடதுபக்கம் திரும்பி கணேமுல்ல வீதியூடாக 6 கிலோ மீற்றர் கொஸ்சின்ன சந்திக்குச் சென்று இன்னும் 100 மீட்டர் சென்று லேகம்கே மாவத்தை வலதுபக்கம் உள்ளது. இப்பாதையூடாக சென்றால் 400 மீட்டர் தூரம் வலதுபக்கம் இக்காணி அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலவிற்பனை இறுதியில் உத்தேச கொள்வனவாளர் பின்வரும் தொகையை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10%;

(2) உள்ளூராட்சிக் கட்டணம் 1%;

(3) ஏலதாரரின் தரகு பணம் 2 1/2 %;

(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000;

(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500;

(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்;

(7) மிகுதி 90% ஏலத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பிஎல்சி பிரதான தலைமை அலுவலகம் அல்லது நகரக் கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக பின்வரும் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும் :

''லக்மால் சுபசிங்க, முகாமையாளர் (அறவிடுதல்), கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 21, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01, தொலைபேசி இல. : 2347719.''

எல். பி. சேனநாயக்க
(சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுநர், நீதிமன்ற ஆணையாளர்,
மேல் மாகாண வர்த்தக நீதிமன்றம் மற்றும்
கொழும்பு மாவட்ட நீதிமன்ற மூத்த
உத்தரவுபெற்ற ஏலதாரர், அரசாங்க மற்றும்
வர்த்தக வங்கிகள்.

இல. 99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலை/பெக்ஸ் : 2445393

8-963

---

**மக்கள் வங்கி – மாத்தறை தர்மபால மாவத்தை கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29உ எனும் அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்*

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2008.09.16 ஆந் திகதி மு. ப. 10.30 க்கு இங்கு கீழ் குறிப்பிடுகின்ற சொத்துக்கள் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்**

தென் மாகாணத்தின், மாத்தறை மாவட்டத்திலே கந்தபட பத்துவையின் நரவெல்பிடயில் அமைந்துள்ள துஸெவ்மினிஹாகேவத்த என்ற காணி 2005.07.16 ஆந் திகதிக்குரிய திரு. எம். எல். எம். ரஷ்மி

அதிகாரம்பெற்ற நிலஅளவையாளர் அவர்களினால் அளந்து ஒழுங்குசெய்யப்பட்ட இலக்கம் 2258 எனும் வரைபடத்திற்கிணங்க பிரித்து வேறாக்கப்பட்ட 'ஏ' எழுத்தைக் கொண்ட ஒரு நூற் எட்டு பேர்ச்சஸ் (0ஏ. 1றூ. 8பே.) கொண்ட மிகப்பெரிய காணியும் அதிலுள்ள அனைத்துப் பயிர்ச்செய்கை, கட்டிடங்கள் போன்றன அடங்கலாக.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2008.02.29 ஆந் திகதிய அரச வர்த்தமானப் பத்திரிகையிலும், 2008.03.14 ஆந் திகதிய "தினமின" பத்திரிகையிலும் பிரசுரமாக்கப்பட்ட ஏலவிற்பனை பகுதியைக் கவனத்திற் கொள்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- ஹக்மன எல்லேவெல வழியே சுமார் 2 1/2 கி. மீற்றர் அளவு தூரம் செல்ல நரவெல்பிட சந்தியை எதிர்கொள்ளும் முன்னரே பாதையின் வலப்பக்கமாக இச்சொத்துக்கள் (ஆதனம்) அமைந்திருக்கும்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் ஏலவிற்பனை தீர்ந்துவிட்டதும் கீழ்க்கண்டபடி பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10%;

(2) உள்ளூர் அதிகாரியின் வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு விற்பனை விலையில் 1%;

(3) ஏலவிற்பனையாளர் தரகு என கொள்வனவு விலையில் 2 1/2 %;

(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;

(5) விற்பனை செலவும் இதர செலவுகள் இருப்பின் அவற்றுக்கான பணம் ;

(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90%க்கான பணத்தை விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் மாத்தறை, பிட்டனிய வீதியில் இலக்கம் 38/1ஏ எனும் நிலையத்திலுள்ள மக்கள் வங்கி பிரதேச பிரதான அலுவலகத்தில் பிரதேச முகாமையாளர் அவர்களுக்கு செலுத்துக. தொலைபேசி இல. 041-2222792, 2222822, 2224773, பெக்ஸ் இலக்கம் 041-2222688.

உரிமை கோறும் ஒப்பினையையும் வேறு விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெற்றுக்கொள்க.

மேற்படி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாதுவிடவும் மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

ஜீ. பீ. ஆனந்த,
அதிகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731

8-995

### மக்கள் வங்கி-ஹிக்கடுவைக் கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கம் கொண்ட மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ட பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்

**காலி மாவட்டத்தில், வெல்லபடபற்று, ஹிக்கடுவை பிரதேச சபையில் தொடந்தூவ உப அலுவலக எல்லையில், மோதரைபடுவத, தொடந்தூவ பாதையில் இலக்கம் 8பீ கொண்ட மருதானையில் ஔவிட என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் என். பீ. விஜேவிக்ரம அவர்களினால் 1997.06.15 ஆந் திகதி அளந்து தயாரித்த இல. 709 கொண்ட வரைபடத்தில் துண்டு இலக்கம் 3 கொண்ட நிலப்பங்கும் அதனுள் அமைந்துள்ள பயிர், கட்டிடங்கள் முதலான சகலவற்றுடன் ஏல விற்பனை (விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 21.74பே.)**

மக்கள் வங்கியினால் என் மீது சாட்டப்பட்ட அதிகாரத்தின்கீழ் என்னால் 2008.09.16 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

அரச வர்த்தமானியில் 17.08.2007 ஆந் திகதியும், "டெயிலி நியூஸ்", "தினமின" பத்திரிகைகளில் 2007.10.08 ஆந் திகதி பிரசுரித்துள்ள ஏலவிற்பனைத் தீர்மான அறிவித்தலுக்கு அவதானத்தைச் செலுத்தவும்.

**ஆதனத்திற்குள் பிரவேசித்தல்.**- காலியிலிருந்து ஹிக்கடுவைப் பக்கமாகப் போகும்போது குமாரகந்த சந்திக்கு 100 மீற்றர் அளவு இப்பால் பாதையின் வலது பக்கமாக தொடன்தூகொடை பாதை சந்திக்கும். இப்பாதையில் 400 மீற்றர் அளவு முன்னோக்கிப் போகும்போது பாதையின் வலதுபக்கம் பாதைக்கு முகம்கொடுத்ததாக இந்தக் காணி அமைந்திருக்கின்றது.

**செலுத்தும் முறை.**- ஏலவிற்பனை முடிந்தவுடனே வெற்றியான கொள்வனவாளரால் கீழ்க்காணும் விதமாக பணத்தால் செலுத்தல் வேண்டும் :

(1) கொள்விலையின் பத்து வீதம் (10%) ;

(2) உள்ளூராட்சி அதிகார சபையின் வரிக்கென உள்ளூராட்சி அதிகாரசபைக்கு விற்பனை விலையின் ஒரு வீதம் (1%) ;

(3) ஏலதாரரின் தரகாக விற்பனை விலையின் இரண்டரை வீதம் (2 1/2%) ;

(4) குமாஸ்தாவினதும் அறிவிப்பாளரினதும் கட்டணமாக ரூபா 500 உம் ;

(5) விற்பனைச் செலவும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அப்பணம் ;

(6) விற்பனைச் சான்றிதழுக்குரிய முத்திரைக் கட்டணம்.

கொள்விலையின் மிகுதி 90% ஆன பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 தினங்களுக்குள் காலி, கீழ் டீன்ஸன் பாதை, இல. 22, மக்கள் வங்கியின் பிராந்திய தலைமை அலுவலக பிராந்திய முகாமையாளர் வசம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. 091-2232311, 091-2234174, பெக்ஸ் இல. 091-2232230.

உரிமை உறுதியையும் ஏனைய உரிய விபரங்களையும் மேல் குறிப்பிட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேல் குறிப்பிடப்பட்ட பிரகாரம் குறிப்பிட்ட பணம் 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் தற்போதைக்கு செலுத்தியிருக்கும் கொள்விலையின் 10% பணம் திருப்பிச் செலுத்தாமல் இருப்பதற்கு மீண்டும் ஆதனத்தை விற்பதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

ஏ. எஸ். வியனகே (ச. நீ.),
நீதிமன்ற ஆணையாளர், ஏலதாரர்,
மதிப்பீட்டாளர், சத்தியப்பிரமாணம் செய்த
மொழிபெயர்ப்பாளர்.

இல. 228/ஏ, வலவ்வத்தை,
கெஸ்பாவை,
தொலைபேசி இல. 2703478, 0777-459823.

8-1010

---

## DFCC வர்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விஷேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***964 ஆம் மற்றும் 1214 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலமாக அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

***அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் கே. சிறிவர்தன அவர்களால் வரையப்பட்ட பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான 1989 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதியிடப்பட்ட 77/1989 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 14 எனக் குறிப்பிடப்பட்டுள்ள தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், மாத்தறை நான்கு எல்லைப் பகுதியில் அமைந்துள்ள வல்கமையைச் சேர்ந்த அன்கம்பெடிகேவத்த, கீகனகேவத்த, ஒவிலனேவத்த, கப்புகமகேவத்த என அழைக்கப்படும் காணித்துண்டு அதில் அமைந்துள்ள தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கியதாக***

***காணியின் விஸ்தீரணம் : (0ஏ. 0றூ. 10.69பே.)***

*(மாத்தறை பிரசித்த நொத்தாரிசு டீ. ஆர். திஸ்குமார அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, ஒற்றோபர் 14 ஆந் திகதி மற்றும் 2006 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதியிடப்பட்ட 964 மற்றும் 1214 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலம் மாத்தறையைச் சேர்ந்த கந்தம்பேகேயே பியதாச என்பவரால் DFCC வர்தன வங்கி லிமிட்டெட்டிற்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

DFCC வர்தன வங்கி லிமிட்டெட்டினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**- ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 .5 % (இரண்டரை சதவீதம்);
(4) மொத்த விளம்பரச் செலவான ரூபா 35,000 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 500.
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு வீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு 011- 2442442, என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் DFCC வர்தன வங்யின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகாரம் கொண்ட ISO 9001 : 2000 தரச் சான்றிதழ்
பெற்ற ஒரேயொரு பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர்,
பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும் காணித் தரகர்.

| | |
|---|---|
| *தலைமை அலுவலகம் :* | *நகர அலுவலகமும், காட்சியறையும்:* |
| 24, டொரிங்டன் வீதி, | 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி, | கொழும்பு 5. |
| தொலைபேசி : 081 – 2227593 | தொலைபேசி இல. : 011 2502680, 2585408, |
| தொலை/பக்ஸ் 081 – 2224371 | தொலை./பக்ஸ் : 011 – 2588176 |
| மின் அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின் அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

8-1012/1

---

## DFCC வர்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிக்கடன் மீட்பு சட்டத்தின் (விஷேட ஏற்பாடுகள்) 8 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை**

***402 ஆம் 736 ஆம் மற்றும் 823 ஆம் இலக்க பிணை உறுதிகள் மூலமாக அடகு வைக்கப்பட்ட உடைமைகளின் விபரம்***

***அனுமதிப்பத்திரம்பெற்ற நிலஅளவையாளர் பி. ஜி. கருணாதாச அவர்களால் வரையப்பட்ட பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான 1999 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதியிடப்பட்ட 1429 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெல்லபொடபத்துவில் உள்ள தொடம்பஹலவில் அமைந்திருக்கும் பட்டபெந்திகேவத்த என அழைக்கப்படும் காணித்துண்டு அதில் அமைந்துள்ள தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் உள்ளடங்கியதாக***

***காணியின் விஸ்தீரணம் : (0ஏ. 2றூ. 0பே.)***

*(மாத்தறை பிரசித்த நொத்தாரிசு டீ. ஆர். திஸ்குமார அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதியிடப்பட்ட 402 ஆம் இலக்க பிணை உறுதி, 2005 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதியிடப்பட்ட 736 ஆம் இலக்க பிணை உறுதி, 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதியிடப்பட்ட 823 ஆம் இலக்க பிணை உறுதி ஆகியவற்றின் மூலம் திக்வெல்லையைச் சேர்ந்த ஷேர்லி இந்திக எதிரிவீர விஜேசூரிய என்பவரால் DFCC வர்தன வங்கி லிமிட்டெட்டிற்கு அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.)*

DFCC வர்தன வங்கி லிமிட்டெட்டினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2008 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 16 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணி தொடக்கம் எம்மால் ஸ்தலத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**- ஏலவிற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப்பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய 1% விற்பனை வரி (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2 .5 % (இரண்டரை சதவீதம்);
(4) மொத்த விளம்பரச் செலவான ரூபா 35,000 ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் ரூபா 500.
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 2,000.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு வீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு 011- 2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் DFCC வர்தன வங்யின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
அரச அங்கீகரம் கொண்ட ISO 9001 : 2000 தரச் சான்றிதழ் பெற்ற ஒரேயொரு பிரபல முன்னோடி பட்டய ஏலவிற்பனையாளர், பெறுமதி மதிப்பீட்டு ஆலோசகர் மற்றும் காணித் தரகர்.

| | |
|---|---|
| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும், காட்சியறையும்: |
| 24, டொரிங்டன் வீதி, | 290, ஹவ்லொக் றோட், |
| கண்டி, | கொழும்பு 5. |
| தொலைபேசி : 081 – 2227593 | தொலைபேசி இல. : 011 2502680, 2585408, |
| தொலை/பக்ஸ் 081 – 2224371 | தொலை./பக்ஸ் : 011 – 2588176 |
| மின் அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின் அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.schokmanandsamerawickreme.com

8-1012/2

---

## வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ – வெள்ளவத்தை கிளை

### பகிரங்க ஏலவிற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட சட்டம்) 4 ஆம் பிரிவு

### வசிப்பிடத்திற்கு பொருத்தமான சொத்து

**வசிப்பிடத்துக்குப் பொருத்தமான கம்பஹா மாவட்டம், சியனே கோரளை களனி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட திப்பிட்டிகொட கிராமத்தின் ஸ்ரீ சுபோதாராம மாவத்தையில் அமைந்துள்ள வரிப்பண இலக்கம் 34, மில்லகஹாவத்த மற்றும் பெலிகஹாவத்த என்னும் இக்காணியில் பிரித்தெடுக்கப்பட்ட ஒரு பகுதியும் அதனுள் அடங்கும் கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இதன் பரப்பளவு : (41.80 பேர்ச்சஸ்) ஆகும்.**

*(இவ்வாதனம் கமகே தொன் ஹேமன்த நன்திக என்பவர் கடனாளியாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ யினால் பெறப்பட்ட ஆதனம் ஆகும்)*

**ஆதனத்தை வந்தடைதல்**.- கொழும்பு-கண்டி பாதையில் சுமார் 10. கி. மீ. தூரம் திப்பிட்டிகொட சந்திவரை வந்து திப்பிட்டிகொட பாதையை அடைந்து சுமார் 200 கி. மீ. தூரம் சுபோதாராம மாவத்தைக்குத் திரும்பவும். இப்பாதையில் 75 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் பாதைக்கு எல்லையாக அமைந்துள்ளது.

இவ்வாதனம் 2008.09.17 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2008.06.13 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2008.07.01 ஆந் திகதிய "த ஐலன்ட்", "திவயின", "தினகரன்" ஆகிய பத்திரிகையைப் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்:-

கொள்முதல் விலையில் 10%; உள்நாட்டு வரி 1%; ஏல விற்பனையாளர் கட்டணம் 2 ½%; நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000; இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூபா 500; சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90%; விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் வரையறுக்கப் பட்ட ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீயில் செலுத்தப்படல் வேண்டும். மிகுதித் தொகை 90%, 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் செலுத்திய தொகையில் 10% இழப்பதற்கும் உரிய சொத்தை மீண்டும் விற்பனை செய்வதற்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

உரித்து ஆதனம் மற்றும் விபரங்களுக்கு.- பிரதான முகாமையாளர் (கடன் அறவிடுதல்) வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி பீஎல்சீ, இல. 479, ரி. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 உடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2661821, 011-2661815.

ஐ. டபிள்யு. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால் உத்தரவாதம் பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 432/1, மவுன்ட் பிலசன்ட் கார்ட்ன்ஸ்,
போவலவத்த றோட்,
ஹீரஸ்ஸகல, கண்டி.
தொலைபேசி இல. 081-2211025, 071-4755974
பெக்ஸ் இல. : 081-2211025.

8-1037/1

**கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சி - நுவரெலியா கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட சட்டம்) 4 ஆம் பிரிவு*

**வசிப்பிடத்திற்கு பொருத்தமான சொத்து ஏலவிற்பனை**

***மீரிகம பிரதேச சபை மற்றும் பல்லேவல உப அலுவலக எல்லைக்குட்பட்ட புகையிரத நிலையத்திற்கு கிட்டிய தோரபிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள திவுல்கஹவத்த மற்றும் திவுல்கஹ ஹேன எனும் காணியில் ஒரு பகுதியும் அதனுள் அடங்கும் வீட்டுக் கட்டிடமும் மற்றும் சகலதும் ஆகும். இதன் பரப்பளவு : (19 பேர்ச்சஸ்)***

*(இவ்வாதனம் போயகும்புர சுமனசிரி மற்றும் பன்னலகெதர ஸ்ரீமதி மல்லிகா சுமனசிரி ஆகியவர்கள் கடனாளியாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக கொமர்ஷல் வங்கி பீஎல்சி இனால் பெறப்பட்ட ஆதனம்)*

**ஆதனத்தை வந்தடைதல்**.- பல்லேவெல புகையிரத நிலையத்திற்கு அண்மையில் புகையிரத குறுக்குப் பாதையிலிருந்து மெதகம்பிட்டிய பாதையில் சுமார் 700 மீற்றர் தூரம் பன்சலையைக் கடந்து சென்று இடதுபக்கம் திரும்பவும். இப்பாதையில் தோரபிட்டிய பக்கமாக சுமார் 200 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் பாதைக்கு எல்லையாக இடதுபக்கமாக அமைந்துள்ளது.

இவ்வாதனம் 17.09.2008 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 11.07.2008 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 26.06.2008 ஆந் திகதிய "லக்பிம", "தினக்குரல்" மற்றும் "த ஐலன்ட்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் :-

கொள்முதல் விலையில் 10%, உள்நாட்டு வரி 1%, ஏல விற்பனையாளர் கட்டணம் 2 1/2%, நொத்தாரிசுக் கட்டணம், விற்பனை உடன்படிக்கைக் கட்டணம் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட கொமர்ஷல் வங்கி தலைமை அலுவலகத்தில் அல்லது கொள்ளுப்பிட்டி கிளையில் செலுத்தப்படுதல் வேண்டும்.

உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு, "முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சி இல. 36/3, புத்த ஜயந்தி மாவத்தை, நுவரெலியா" என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். தொலைபேசி இல. 052-2223761, 052-2223763, 052-5670119.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம்பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 83/5, போமலுவ பாதை,
வட்டபுலுவ,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2211025, 071-4755974
பெக்ஸ் இல. : 081-2211025

8-1037/5

---

**இலங்கை வங்கி**

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின்கீழ் விற்பனை செய்தல் தொடர்பான அறிவித்தல்*

***மந்தாரம்நுவரவில் அமைந்துள்ள ஹய்போரஸ்ற் மினரல் வாட்டர் கம்பனியின் பங்குதாரரான கலே கோறாலேலா கெதர ரம்பண்டா அவர்களுக்குச் சொந்தமான ஆதனம் ஏலவிற்பனை***

கடன் தொடர்பிலக்கம்- 106/99

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிஸக் குடியரசின் 2005.10.14 ஆந் திகதி இலக்கம் 1415 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2005.07.10 ஆந் திகதிய 'தினமின', 'தினகரன்', 'டெய்லி நியூஸ்' ஆகிய புதினப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கிணங்க நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் செலவு மற்றும் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடக்கூடிய பணங்களையும் அறவிடும் பொருட்டு இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தும் நிலமனையும் இல. 24, ரொறிங்ரன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் சமரவிக்ரம அவர்களால் 2008.09.30 ஆந் திகதி முற்பகல் 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், உடஹேவாஹெற்ற பிரிவில், உடகம்பஹா கோரளை ஹுலுகொட்டுவ கிராம சேவையாளர் பிரிவில், மந்தாரம்நுவர கிராமத்தில் அமைந்துள்ள கண்டி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் கே. எம். எச். நவரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்ட 1998, ஒற்றோபர் 27 ஆந் திகதிய 13017 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள "மந்தாரம்நுவர வத்த" என்றழைக்கப்படும் மேற்குறிப்பிட்ட 13017 ஆம் இலக்க வரைபடம், அறிக்கைக்கிணங்க- வடக்கில் : அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட பிபி. என்யூ. 153 ஆம் இலக்க வரைபடத்தின் 86 ஆம் ஆண்டும் ; தெற்கில் : நீரோடைக்கான ஒதுக்கமும் ; கிழக்கில் : அளவையாளர் அதிபதியினால் தயாரிக்கப்பட்ட பிபி என்யூ 153 ஆம் இலக்க வரைபடத்தின் 84, 83 ஆம் துண்டுகளும் ; மேற்கில் : ஒதுக்கமும் குட்வுட்டிலிருந்து பதியபல்லவிற்குச் செல்லும் றோட்டும் எல்லைகளாகக் கொண்ட ஒரு ஏக்கர் ஏழு பேர்ச்சுகள் (1ஏ. 0று. 7பே.) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள ஸ்வர்ணபூமி காணித்துண்டு முழுவதும் அதற்குள் உள்ள அனைத்துமாகும். இது நுவரெலியா மாவட்டக் காணிப் பதிவகத்தில் யூஎச்இ. 9/371/93 ஆம் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி

டி. ஏ. தயானந்த,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
பதியபலல்ல கிளை.

8-1054

## கொழும்பு மாவட்ட நீதிமன்றம்

பெறுமதிமிக்க வீடு மற்றும் ஆதனம் ஏல விற்பனை

வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி, இல. 21, பிரிஸ்டல் வீதி, கொழும்பு 01, கிளை அலுவலகம் 01, யூனியன் இடம், கொழும்பு 02

.................... வாதி.

வழக்கு இல. : 17273/எம்பி

அத்துடன்

(1) லு ஹோ சிஸன் என்ற லூ சுனில் இல. 136, ஜஸ்ரிஸ் அக்பர் மாவத்தை, கொழும்பு 02 ; வியாபார பெயரின்கீழ் பதிவு செய்யப் பட்டுள்ள 'சுனில் ஸ்ரோர்ஸ்' இல. 136, ஜஸ்ரிஸ் அக்பர் மாவத்தை கொழும்பு 02

(2) கல்லகே ரோஹண திஸ்ஸ டீ சில்வா இல. 3ஏ. 75 வீடமைப்புத் திட்டம் கிரிபத்கொடை, களனி

.................... பிரதிவாதிகள்.

மேற்குறிப்பிடப்பட்ட பெயர்களுடைய இருதரப்பாரும், பிரசித்த நொத்தாரிசு புத்திமதி லலினி விக்ரமராச்சி அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு 1999. 02. 03 திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 4696 இன் கீழ் ஈடுவைக்கப்பட்ட அட்டவணையில் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள ஆதனத்தின் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். அளிக்கப்பட்ட/ எடுக்கப்பட்ட ரூபா 19,28,983.97 கொண்ட தொகையான பணம் மற்றும் அதன்மீது ஆண்டுக்கு 22% வட்டியையும் அத்துடன் செலுத்தத் தவறியுள்ள, 2000 ஓகத்து 26 ஆந் திகதியிலிருந்து ஆண்டுக்கு 28% வட்டியையும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்தத் தவறி அலட்சியப்படுத்தியுள்ளார்கள். வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி, சொல்லப்பட்ட தொகையான ரூபா 19,28,983.97 ஐ, 2006 ஓகத்து 26 திகதியிலிருந்து முழுக்கொடுப்பனவையும் செலுத்தும்வரை ஆண்டுக்கு 28% வட்டியுடனும் மீள அறவிடுவதற்காக மேற்கூறப்பட்ட வடிவிலான சட்டநடவடிக்கை எடுக்க தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 2006, மாச்சு 21 ஆந் திகதியிடப்பட்ட கட்டளையிலுள்ளவாறு, சொல்லப்பட்ட தொகையான ரூபா 19,28,983.97ஐ, 2000 ஓகத்து 26 ஆந் திகதியிலிருந்து 2006, மாச்சு 21 ஆந் திகதிவரை மற்றும் முழுக்கொடுப்பனவும் செலுத்தும் திகதி வரை ஆண்டுக்கு 28% வட்டியுடனும் முறையே வி. வ. வ. 1 %, பாதுகாப்பு வரி 6.5% ஆகியவற்றுடனும் சேர்த்து அறவிடுவதற்காக மேற்குறிப்பிடப்பட்டவாறு ஈட்டு முறி இல. 4696 இனால் வாதியான வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள சொல்லப்பட்ட ஆதனத்தை பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென கட்டளையிட்டு அதிகாரம் அளித்துள்ளது. கொழும்பு மாவட்ட நீதிமன்றமானது, சொல்லப்பட்ட தொகையான ரூபா 19,28,983.97 ஐ 2000, ஓகத்து 26 ஆந் திகதியிலிருந்து 2006 மாச்சு 21 ஆந் திகதிவரை மற்றும் கொடுப்பனவு செலுத்தும் திகதி வரையுமான ஆண்டுக்கு 28% வட்டியுடனும் மொத்தத்தொகைக்கான வி. வ. வ. 1% பாதுகாப்பு வரி 6.5% ஆகியவற்றுடனும் சேர்த்து ஏலவிற்பனை மூலம் அறவிட்டு வங்கியில் வைப்பிலிட, சொல்லப்பட்ட ஆதனத்தை விற்பனை செய்வதற்கு ஏலதாரரான, நுகேகொடை, பாகொடை வீதி, இல. 03 ஐச் சேர்ந்த எகொடகே இர்வின் பெரேரா ஆகிய என்னை முறையாக நியமிக்கின்றது.

சொல்லப்பட்ட உத்தரவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், சொல்லப்பட்ட ஆதனத்தை 2008, செத்தெம்பர் 17 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்வேன்.

**ஆதனத்திற்குள் பிரவேசித்தல்**.- கொழும்பு-கண்டிபெருவீதி வழியே சென்று கிரிபத்கொடை சந்தியை அடையும் முன்னர், ஹுனுப்பிட்டி வீதிக்கு இடப்பக்கம் திரும்பி, 1 1/2, கி. மீ. சென்று லும்பினி மாவத்தைக்கு இடப்பக்கம் திரும்பி வீடமைப்புத் திட்டம் வரை செல்ல இல. 3ஏ 75 (தற்போது இல. 88) கொண்ட ஸ்தானத்தில்விற்பனைக்குரிய ஆதனத்தை காணலாம்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் தொகைகளை காசாக/வங்கி உண்டியலாக செலுத்த வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(1) கொள்விலையின் 25 % (இருபத்தைந்து வீதம் ) ;
(2) அரசிற்கு செலுத்தப்பட வேண்டிய வரிகள் ;
(3) பெறுமதி சேர்மதி வரியுடன் உள்ளூர் அதிகாரசபை விலை மதிப்பு கட்டணங்கள் உட்பட்ட விற்பனையில் உறப்பட்ட எல்லா செலவுகள் ;
(4) ஏலதாரரின் தரகு 2 1/2 % (இரண்டரை வீதம்) ;
(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள் ;
(6) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தற்கான நொத்தாரிசு கட்டணம்.

கொள்வனவு விலையின் 75%ஐ விற்பனைத் திகதியிலிருந்து 30 தினங்களுக்குள் கொழும்பு மாவட்ட நீதிமன்ற பதிவாளரிடம் செலுத்த வேண்டும். உரித்துமாற்ற உறுதியானது, நொத்தாரிசு கட்டணங்கள் , முத்திரைக் கட்டணங்கள் மற்றும் ஆதன உரித்துகொடுப்பனவுகள் நிதி மூலம் நீதிமன்றினால் இதன் பின்னர் பெறப்பட்டு விற்பனை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அத்தாட்சிப்படுத்தப்படும்.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சியனே கோறளை, அதிகாரி பற்று, தளுகம நகர சபை எல்லைகளுக்குள் வேவல் தூவவில் அமைந்துள்ள 'கெவன்திலியன்' எஸ்டேட் என அழைக்கப்படும் காணி 1964, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்று நிலஅளவையாளர் நாயகத்தினால் சான்றுபடுத்தப்பட்ட வரைபடம் இல. 5217 இல் துண்டு 104 என அடையாளமிடப்பட்டுள்ள பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் சொல்லப்பட்ட துண்டு 104 இன் எல்லைகளாவன வடக்கு : துண்டு இல. 81; கிழக்கு : துண்டு இல. 82 மற்றும் இல. 103 ; தெற்கு : துண்டு இலக்கங்கள் 1, 5, 8, 78, 112 ஆகியவற்றின் வீதிக்காக விவரிக்கப்பட்டுள்ளவாறு துண்டு இல. 11டி மற்றும் துண்டு இல. 105 ; மேற்கு : இது 1964 ஏப்பிறல் 30 திகதியிடப்பட்ட இல. ஏ 5217 ஐக் கொண்ட நிலஅளவையாளர் நாயகத்தின் வரைபடத்தின் சொல்லப்பட்ட நிலஅளவை வரைபடத்திற்கமைய பதினான்கு தசம் ஐந்து எட்டு பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 14.58பே) விஸ்தீரணமுடையது ; கொழும்பு காணிப்பதிவகத்தில் சீ 465/52 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இர்வின் பெரேரா,
(சமாதான நீதவான்),
வர்த்தக உயர் நீதிமன்ற மற்றும்
மாவட்ட நீதிமன்ற நீதிமன்ற ஆணையாளர்,
அரச மற்றும் வர்த்தக வங்கிகளுக்கான
விலைமதிப்பிடுநர், உத்தரவு பெற்ற ஏலதாரர்.

இல. 03, பாகொடை வீதி,
நுகேகொடை.
தொலைபேசி இல. 2810145, 077-212602

8-1051

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.